Ontario Energy Board
Commission de l’énergie de l’Ontario

TAKE CHARGE

# உங்களுடைய இயற்கை எரிவாயு கட்டணச் சீட்டை விளங்கிக் கொள்ளல்

<u>நுகர்வோர் கட்டணம்</u>

இது உங்களுடைய இயற்கை எரிவாயுக் கணக்கை நிர்வகிக்க வேண்டிய சேவைகளான, மீற்றர் வாசிப்பு, வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் அவசரகால பதில் நடவடிக்கை போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு நிலையான கட்டணமாகும்.

கட்டணம் அறவிடும் காலம் ஒன்றின் போது இயற்கை எரிவாயுவை நீங்கள் பாவிக்காவிட்டாலும் கூட இந்தக் கட்டணம் உங்களிடம் அறவிடப்படும்.

.

<u>விநியோகம்</u>

இயற்கை எரிவாயுவை இடம்மாற்றல், சேமிப்பு மற்றும் பங்கிடல் செலவுகளை இது உள்ளடக்கும்.

* **<u>இடம்மாற்றல்</u>**: இயற்கை எரிவாயுவை, கனடாவின் மேற்குப் பகுதியிலிருந்தும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தும் ஒன்ராறியோவுக்கு இடம்மாற்றுவதற்கான செலவு.

* <u>சேமிப்பு</u>: இயற்கை எரிவாயுவை சேமிப்பதற்கான செலவு.

* **<u>விநியோகம்</u>**: ஒன்ராறியோவில் உள்ள பயன்பாட்டு நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கும் அமைப்புக்கூடாக வாடிக்கையாளர்களுக்கு இயற்கை எரிவாயுவை


விநியோகிப்பதற்கான செலவு. நீங்கள் எவ்வளவு இயற்கை எரிவாயுவைப் பாவிக்கின்றீர்கள் என்பதில் இடம்மாற்றல், சேமிப்பு மற்றும் விநியோகக் கட்டணங்கள் தங்கியுள்ளன. அத்துடன் உங்களுடைய கட்டணச் சீட்டில் ஒரு தனியான வரியில் இவை பட்டியலிடப்படலாம்.

**இயற்கை எரிவாயு வழங்கல் கட்டணம்**

இயற்கை எரிவாயுவுக்கான கட்டணம் இது, நீங்கள் பாவிக்கும் அளவின் அடிப்படையில் இது அறவிடப்படுகிறது. ஒன்ராறியோவில், இயற்கை எரிவாயுப் பொருட்களின் விலைகள் பயன்பாட்டு நிறுவனத்தின் விலையுயர்வுக்கு உட்படாமலேயே நுகர்வோருக்குக் கடத்தப்படுகின்றன.

**இயற்கை எரிவாயுச் செலவுச் சீரமைப்பு**

உங்களுடைய கட்டணச் சீட்டில் எரிவாயுச் செலவுச் சீரமைப்பு தனியாகப் பட்டியலிடப்பட்டிருக்கலாம். இயற்கை எரிவாயுவின் உண்மையான விலைக்கும் முன்அறிவுப்பு விலைக்கும் உள்ள வேறுபாடே இந்தச் சீரமைப்பு ஆகும்.




உங்களுடைய இயற்கை எரிவாயு பயன்பாட்டு நிறுவனத்திற்கு ஏற்ப உங்களுடைய கட்டணச் சீட்டிலுள்ள தனிப்பட்ட வரிகள் வேறுபட்ட விதங்களில் பிரிக்கப்படலாம்..

இவ்வகையான கட்டணச் சீட்டு விபரங்கள் பற்றி மேலும் அறிவதற்குப் பாருங்கள் :www.ontarioenergyboard.ca/OEB/Consumers

## OEB ன் இணையத்தள கட்டணச் சீட்டுக் கணிப்பியைப் பாருங்கள்

உங்களுடைய இயற்கை எரிவாயுக் கட்டணச் சீட்டை நன்கு விளங்கிக் கொள்ள, OEB ன் இணையத்தள கட்டணச் சீட்டுக் கணிப்பி உங்களுக்கு உதவ முடியும். எரிவாயு சந்தைப்படுத்துபவர் ஒருவருடன் உள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் உங்களுடைய கட்டணச் சீட்டு எப்படி இருக்கும் என்பதையும் கூட நீங்கள் பார்க்கலாம்.

www.ontarioenergyboard.ca/OEB/Consumers


- மாதாந்த மதிப்பீட்டு இயற்கை எரிவாயு கட்டணச் சீட்டு ஒன்றைக் கணியுங்கள்
- OEB மற்றும் OEB தீர்மானங்களுடன் உங்களுடைய பயன்பாட்டு நிறுவனம் தாக்கல்செய்த சமீபத்திய விகித விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறியுங்கள்.
- உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்தை நேரடியாகத் தொடர்புகொள்ள விரும்பினால் தொடர்புத் தகவல்களைப் பெறுங்கள்

.

குறிப்பு: எங்களுடைய கட்டணச் சீட்டு கணிப்பி சொல்லும் இலக்கங்கள் தகவலுக்கான மதிப்பீடு மட்டுமே ஆகும். உங்களுடைய மொத்தக் கட்டணச் சீட்டைப் பாதிக்கும் வேறு காரணிகள் இந்த மதிப்பீட்டுக்கும் உங்களுடைய பயன்பாட்டிலிருந்து வழமையாக நீங்கள் பெறும் கட்டணச் சீட்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டுக்குக் காரணமாக இருக்கலாம். உண்மையான பயன்பாட்டுக்கும் மொத்த அளவுக்கும் எப்போதும் உங்களுடைய பயன்பாட்டு நிறுவனக் கட்டணச் சீட்டைப் பாருங்கள்.

இது ஒரு மாதிரி இயற்கை எரிவாயு கட்டணச் சீட்டு…

இயற்கை எரிவாயு சந்தைப்படுத்துபவர் ஒருவருடான ஒப்பந்தத்தின் அடிப்படையில் உங்களுடைய கட்டணச் சீட்டு இப்படியிருக்கலாம் ..




MONTHLY BILL STATEMENT
UTILITY

Account Number:
000 000 000 000 0000 0

Meter Number:
0000000

| Your Natural Gas Charges | |
|---|---|
| Customer Charge | X.XX |
| Delivery | X.XX |
| Gas Supply Charge<br>The Board approves the price utilities charge for natural gas. | X.XX |
| Gas Cost Adjustment | X.XX |
| Your Total Natural Gas Charges | X.XX |
| H.S.T. | X.XX |
| Total Amount | $X.XX |



MONTHLY BILL STATEMENT
RETAIL CONTRACT

Account Number:
000 000 000 000 0000 0

Meter Number:
0000000

| Your Natural Gas Charges | |
|---|---|
| Customer Charge | X.XX |
| Delivery | X.XX |
| Gas Supply Charge<br>Supplied by: your selected retail company | X.XX |
| Gas Cost Adjustment | X.XX |
| Your Total Natural Gas Charges | X.XX |
| H.S.T. | X.XX |
| Total Amount | $X.XX |

* சில்லறை விற்பனையாளரின் ஒப்பந்த விலையை உள்ளிடுங்கள், ஒப்பீட்டு மாதாந்த கட்டண அறிக்கை ஒன்றை அருகருகே எங்களுடைய கணிப்பி காட்டும்.

**இயற்கை எரிவாயு  சந்தைப்படுத்துபவர் ஒருவருடன் உங்களுக்கு ஒரு ஒப்பந்தம் இருந்தால்**

உங்களுடைய ஒப்பந்தத்தில் இடம்மாற்றல் மற்றும் சேமிப்புச் செலவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது விலக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை உங்களுடைய ஒப்பந்தம் சொல்லும்.

## தகவலறிந்த சக்தி நுகர்வோராக இருப்பதற்கு, ஒன்ராறியோ சக்திச் சபை உங்களுக்கு உதவலாம்

| |
|---|
| பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்களுக்குப் பார்வையிடுங்கள்:<br>www.ontarioenergyboard.ca/OEB/Consumers<br><br>எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள் (திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.)<br><br>1-877-632-2727 (ஒன்ராறியோவுக்குள் கட்டணமற்றது)<br>416-314-2455 (ரொறன்ரோ பெரும்பாகத்துக்குள் அல்லது கனடாவுக்கு வெளியே)<br>consumerrelations@ontarioenergyboard.ca<br><br>எங்களைப் பின்தொடருங்கள்: @OntEnergyBoard |

ஒன்ராறியோ சக்திச் சபை என்பது சுயாதீனமான, பாரபட்சமற்ற ஒரு பொது நிறுவனம் ஆகும். பொதுமக்களின் நலனுக்காக நாங்கள் முடிவெடுக்கின்றோம். ஒரு நியாயமான செலவில், நம்பகமான சக்திச் சேவைகளை உங்களுக்கு வழங்கும், பணரீதியாக சாத்தியமான வினைத்திறனான சக்தித் துறையை ஊக்குவிப்பது எங்களுடைய நோக்கம் ஆகும்.

*வேறு மொழிகளிலும் இத் தகவல் கிடைக்கின்றது. எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.*